# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**
**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். 1. NC 3736/விசாரணை/E/2021, 2. NC 4373/விசாரணை/E/2021**
**(SA 3736/விசாரணை/E/2021)**

திருமதி/செல்வி.M.ஜனனி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சோழிங்கநல்லூர், சென்னை-600 097. .. பொது அதிகார அமைப்பு

******

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 25.08.2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், சோழிங்கநல்லூர் தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் திரு.சபரீஸ்வரன் 15.05.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, மேல்முறையீட்டாளருக்கு 22.10.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் 26.10.2025 அன்று பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டு, அஞ்சல் துறையால் அக்கடிதம் “Addressee Left” என்று குறிப்பிடப்பட்டு, தங்கள் அலுவலகத்திற்கே மீள திரும்ப வரபெற்றுள்ளதாக தெரிவித்து, அவற்றின் நகலை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. ஏற்கனவே இவ்வாணையத்தில் 25.08.2025 அன்று நடைபெற்ற விசாரணைக்காக இவ்வாணையத்திலிருந்து மேல்முறையீட்டாளருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையும் அஞ்சல் துறையால் Door Locked என்று குறிப்பிடப்பட்டு, இவ்வாணையத்திற்கே திரும்ப வரப்பெற்றுள்ளது.

3. இவ்வாணையத்தின்25.08.2025 அன்று நடைபெற்ற விசாரணை அழைப்பாணை இவ்வாணையத்திற்கே திரும்ப வரப்பெற்றதன் அடிப்படையிலும், பொதுத் தகவல் அலுவலரால் 22.10.2025 அன்று அனுப்பப்பட்ட கடிதமானது திரும்ப வரப்பெற்றுள்ளதன் அடிப்படையிலும், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 01.06.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்கள். 1. NC 3736/விசாரணை/E/2021, 2. NC 4373/விசாரணை/E/2021 (SA 3736/விசாரணை/E/2021)**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சோழிங்கநல்லூர், சென்னை-600 097.

திருமதி/செல்வி.M.ஜனனி
3/847A, 2வது மாடி, 6வது குறுக்குத் தெரு,
கிருஷ்ணா நகர், பாலவாக்கம்,
சென்னை-600 041.

Copy to: Files

RJ/PS 1.6